## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

**R.L.T.O.P.No. 3 of 2023** **Date:10.06.2025**

பெயர் : மகேந்திரன் த/பெ.பக்தவாச்சலம்

சாட்சி 20.11.2024 மற்றும் 27.11.2024 அன்று பகுதியாக குறுக்கு விசாரனை செய்யப்பட்டு இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியத்தின் மீது குறுக்கு விசாரணை தொடர்ச்சி.

1. எங்கள் சங்கத்திற்கு வழக்கு சொத்து தானமாக கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் ஆவணத்தில் மேற்படி வழக்குச் சொத்தில் உள்ள கட்டிடம் ஓட்டு வீடாக மட்டுமே கண்டுள்ளதால் மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் உண்மைநிலை தெரியவரும் என்பதால்தான் நான் அந்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

2. எங்கள் சங்கத்திற்கு சொந்தமான கட்டிடங்கள் பராமரிப்பு செய்யப்பட்டதற்கான விபரங்களை சம்மந்தப்பட்ட பதிவேடுகளை பார்த்துதான் என்னால் சொல்லமுடியும். அவ்வாறான பதிவேடுகள் ஏதும் உள்ளதா என்று தற்போது என்னால் கூற இயலாது.

3. அவ்வாறு கணக்கு பதிவேடுகள் இருந்தும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் நான் அதை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. ஒரு காலத்தில் கோவர்தனன் செட்டியார் (எ) கோவா செட்டியார் என்பவர் எங்கள் சங்க தலைவராக இருந்தார் என்றால் சரிதான். அவர் எந்த ஆண்டு இறந்தார் என்றால் 2014 அல்லது 2015 ஆக இருக்கலாம். எனக்கு சரியாக நியாபத்தில் இல்லை. அவருக்கு பிறகு திரு.கண்ணன் என்பவர் தலைவராக ஆனார். அவருக்கு பிறகு திரு. ஆனந்தகுமார் என்பவர் தலைவராக ஆனார். வழக்கு எண்கள் RCOP.5/2013, 7/2013, 8/2013, 9/2013 ஆகிய வழக்குகள் எதிர் மனுதாரரின் தகப்பனார் நடேசன்பாபு மற்றும் மோகனசுந்தரம் ஆகியோர் மீது தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்குகள் முறையாக நடத்தாததால் 2015ம் ஆண்டு மேற்படி வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டு அதன்பின்னர் 01.09.2016 முதல் 31.08.2019 வரை உள்ள கால கட்டத்திற்கு எதிர் மனுதாரரின் தகப்பனாருக்கு வாடகை ஒப்பந்தம் மூலம் வழக்கு சொத்து வாடகைக்கு விடப்பட்டது என்றால் சரிதான்.

5. அவ்வாறு வாடகைக்கு விடப்பட்ட கடைகள் எண்-13 மற்றும் 14 ஆகும். மனுவில் உள்ள நிலம் மட்டுமே சங்கத்திற்கு சொந்தமானது என்றாலும், அதில் உள்ள கடைகள் மற்றும் கட்டிடங்கள் அனைத்தும் எதிர் மனுதாரரின் தாத்தாவால் கட்டப்பட்டது என்றால் சரியல்ல. அதனால் கட்டிடத்தின் உரிமையாளர் என்ற முறையில் எதிர் மனுதாரர் அதில் உரிமை கொண்டாடுகிறார் மற்றும் பயன்படுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. அதனால் இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.